# 13

# திட்டமிடுதல்




## PLANNING

# 13

## எப்படித் திட்டமிடக்கூடாது?

### HOW NOT TO PLAN

**1**

பொது வேதப் போதனையைப் புறக்கணிக்கக்கூடாது.

**2**

தேவனது ஒப்புதலுக்காக மட்டும் ஜெபிக்கக்கூடாது.

**3**

குதிரை அல்லது கழுதை போல இருக்கக்கூடாது.

**4**

செல்வாக்கையோ செயலாற்றலையோ சார்ந்திருக்கக்கூடாது.

**5**

எல்லாக் கேள்விகளுக்கும் பதிலுக்காய்க் காத்திருக்கக்கூடாது.

**6**

அடைக்கப்பட்ட கதவுகளை உதாசீனப்படுத்தக்கூடாது.

**7**

அளவுக்குமீறி கலந்தாலோசிக்கக்கூடாது.

**8**

பொது அறிவைத் தட்டிக்கழிக்கக்கூடாது.

**9**

பயணம் சுமூகமாகவே இருக்குமென எதிர்பார்க்கக்கூடாது.

**10**

கடந்தகால வழிநடத்துதலைச் சார்ந்திருக்கக்கூடாது.

## 13

# எப்படித் திட்டமிடக்கூடாது?

### அறிமுகவுரை

- இரட்சிப்பு என்பது ''புதிய ஆளுகையின்'' கீழ் வருவது.

 நமது ''இரட்சகராக'' மட்டுமல்ல, நமது ''ஆண்டவராகவும்''
 கிறிஸ்து ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.

 மனமாற்றத்திற்குப்பின் பவுலின் முதல் கேள்வி :

 *''ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?''*
 (அப் 9:6)

 நாம் திட்டமிடுதல் இறைச்சித்தத்திற்கு இசைந்திருக்கவேண்டும் —

 இது சாதாரண காரியமல்ல —

 இறைச்சித்தம் ''நித்திய'' தன்மையுள்ளது:

 மத் 7:21 ... *பரலோக ராஜ்யம் ... என் பிதாவின் சித்தம்*
 1 யோ 2:17... *தேவ சித்தம் ... என்றும் நிலைத்திருப்பான்*

 தேவ சித்தம் செய்வது இகத்தின் தெரிந்தெடுப்பு மட்டுமல்ல,
 அது ஒரு நித்திய கடமையாகும்.

- வாழ்க்கை என்பது தெரிந்தெடுப்புகளும், தீர்மானங்களும் நிறைந்தது:
 அவை நம்மை உருவாக்கும் அல்லது உடைத்துவிடும்!

 தவறான தெரிந்தெடுப்புகள் எல்லாவற்றையும் தாறுமாறாக்கும்.
 — திருப்பிச் சரி செய்ய முடியாதே போய்விடலாம்.

 இறைமக்களுக்கு,

 தெரிந்தெடுப்பு ''நல்லதுக்கும் கெட்டதுக்கும்'' இடையில்
 அல்ல, ''நல்லதுக்கும் நேர்த்தியானதுக்கும்'' இடையில்!

- திட்டமிடுதல் வாழ்க்கைக்கு முக்கியமானது, இன்றியமையாதது:
 திட்டமிடத் தவறினால், தவறுவதற்குத்தான் திட்டமிடுகிறோம்!

கடவுளா சாத்தானா என்று தெரிந்தெடுப்பதில்தான்

கிறிஸ்தவ வாழ்வு தொடங்குகிறது;

கடவுளா உலகமா என்று தெரிந்தெடுப்பதில்தான்

கிறிஸ்தவ வாழ்வு தொடர்கிறது.

1 யோ 2:16,17இன் பொருள் இதுதான்!

■ இறைச்சித்தம் செய்ததில் நிகரற்றவர் இயேசுவே —

☐ அவரது இகவாழ்வின் துவக்கம் (எபி 10:7)

*''தேவனே ... உம் சித்தம் செய்ய ... இதோ வருகிறேன்''*

☐ அவரது இகவாழ்வின் முடிவு (லூக் 22:42)

*''என் சித்தப்படி அல்ல; உம் சித்தப்படியே''*

துவக்கம்: விருப்பம் (willingness)

முடிவு: இணக்கம் (yieldedness)

இரண்டுமே வாழ்க்கையில் அதிமுக்கியமானவை —

வெறும் விருப்பம் மட்டும் இருந்தால் போதாது.

*உம் சித்தம், தேவா, ஆகட்டுமே!*
*நான் ஓர் மண்பாண்டம் உம் கரத்தில்;*
*உம் பாதத்தண்டை காத்திருக்கும்*
*என்னை உம் சித்தப்படி மாற்றும்!*

—Adelaide Pollard, 1862-1934

■ கிறிஸ்தவ வாழ்வின் வளர்ச்சிக்குப் பல வரையறைகள் உள்ளன.

அதில் ஒன்று —

*''இறைச்சித்தத்தைப் புரிந்துகொள்வதில் தேறுதல்''*

(கொலோ 1:9,10)

■ வாழ்வின் முக்கியக் கட்டங்களில் நிற்கும்போது, அதுவும் பல திசைகள் தெரியும்போது, திட்டமிடுவதும் தீர்மானிப்பதும் அவ்வளவு சுலபமல்ல.

■ திட்டமிடுவதில் தவறிழைத்தால், அது நம்மை மட்டுமல்ல, நம்முடன் தொடர்புடைய அனைவரையும் பாதிக்கும் —

| | | |
|---|---|---|
| பெற்றோர் | — | குடும்பம் |
| மேய்ப்பர் | — | சபை |
| மேலாளர் | — | நிறுவனம் |
| அதிபதி | — | நாடு |

ஞானமாய்த் திட்டமிடுதலோ நிறைவான ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் —

நீதி 24:3,4 ... *ஞானம் ... விவேகம் ... அறிவு ...*

*ஒரு வீடு கட்டப்படுகிறது ...*

தவறான தீர்மானங்கள் நமது இன்றைய வாழ்வை மட்டுமல்ல,
நித்திய வாழ்வையும் பாதிக்கும்.

## எப்படித் திட்டமிடக்கூடாது?

### 1. பொது வேதப் போதனையைப் புறக்கணிக்கக்கூடாது.
Do not ignore the general Bible teaching.

■ இறைச்சித்தம் அறிவதில் மிக அடிப்படையான சத்தியம் —
"இறைவார்த்தையே இறைச்சித்தம்!"

இறைவார்த்தையை வாசித்து ஆராய்வதை அசட்டை செய்தால், இறைச்சித்தத்தைத் தவறவிடுவது திண்ணம் —

சங் 119:105 ... *தீபம் ... வெளிச்சம் ...*

:133 ... *என் காலடிகளை நிலைப்படுத்தி ...*

:165 ... *மிகுந்த சமாதானம் ... இடறலில்லை ...*

*"மிகுந்த சமாதானம்"* = நிலை மாறா உறுதியான நம்பிக்கை, கலக்கமற்ற நிலை

■ இறைவார்த்தையே **பொதுவான** இறைச்சித்தம்;
**குறிப்பாக** இறைச்சித்தம் அறிய இதுவே அடிப்படை —

☐ மக்களுக்கு மோசே சொல்லுகிறான் —
உபா 4:1,6 ... *கட்டளைகள் ... நியாயங்கள் ... ஞானம் ... விவேகம்*

☐ யோசுவாவுக்கு மோசே சொல்லுகிறான் —
யோசு 1 :8,9 ... *நியாயப்பிரமாணப் புத்தகம் ... உன் வழி ...*

☐ சாலொமோனுக்குத் தாவீது சொல்லுகிறான் —
1 இரா 2:1-4 ... *புத்திமான் ... அவரது கட்டளைகள் ... கற்பனைகள்*

■ இறைவார்த்தையின் ஐந்து அம்சங்கள் (1 இரா 2:4) —

அ) *"வழிகள்"* — வாழ்க்கைப் பயணம்

ஆ) *"கட்டளைகள்"* — செதுக்கு / பொறித்துவை
(உ–ம்) ஆணை / இறைக்கட்டளை

இ) *''கற்பனைகள்''* — அரசியலமைப்புச் சட்டங்கள்

(உ–ம்) பைபிள் மீது பதவிப்பிரமாணம் எடுப்பது

ஈ) *''நியாயங்கள்''* — பகுத்தறிதல்

உ) *''சாட்சிகள்''* — நீதிமன்றத்தில் திரும்ப திரும்ப சாட்சி கூறுவது— எவ்வித மாற்றமுமின்றி— அதையே அப்படியே கூறுவது.

விளைவு —

1 இரா 4:29 ... *தேவன் சாலொமோனுக்கு ஞானம் கொடுத்தார்.*

■ இயேசு தமது சொந்த வாழ்வில் —

அ) அவதாரம் எடுக்கையில்

எபி 10:7 ... *புத்தகச் சுருளில்* ...

ஆ) நப்தலி செல்ல நாசரேத்தை விடுகையில்

மத் 4:12-16 ... ஒரு வசனம் மற்றும் ஒரு சூழ்நிலை

■ பவுலும் பர்னபாவும்

அப் 13:46,47 ... ஒரு வசனம் மற்றும் ஒரு காலக்கட்டம்

■ எருசலேமின் ஆலோசனைச் சங்கம்

அப் 15:14,15,17,19

*ஆசரிப்புக் கூடாரத்தைத்* திருப்பி எழுப்புவது

இஸ்ரவேலருக்கு மட்டுமல்ல, *''புறவினத்தாருக்கும்!''*

■ எனவே, திருமறையின் அடிப்படை உபதேசங்களில் கவனம் செலுத்தும்போதுதான், குறிப்பிட்ட சூழல்களில் இறைச்சித்தத்தை அறிய முடியும்—

(உ–ம்) அடிப்படைக் கணிதம், பின்னர் சிறப்புப் பிரிவுகள்

அடிப்படை அறிவியல், பின்னர் சிறப்புப் பிரிவுகள்

வியக்கும் வகையில் திருமறை இரண்டையும் கொண்டது—

ஏசா 8:19,20 ... *''வேதம்''* + *''சாட்சியாகமம்''*

(பிரமாணம்) (வாழ்க்கை)

ஆவியானவர் ஒருபோதும் வேதத்திற்கு முரணாய் நடத்துவதில்லை.

- பைபிள் படிக்கும்போது,

  ''உமது சித்தத்தை எனக்குக் **காட்டும்**'' என்று மட்டுமல்ல,

  ''உமது சித்தத்தைச் **செய்ய** எனக்குப் போதியும்''

  என்றும் ஜெபியுங்கள் (சங் 143:10)

- திருவார்த்தையின் ***பிரவேசம்*** வெளிச்சம் தரும்—

  சங் 119:130 — ''புரிந்துகொள்ளுதல் / தெளிவு''

  நமது மனதிற்குள் *''நுழைவு''*

  என்ன செய்வதென்று தெரியாதபோது!

- கிரமமான அனுதின வேதத் தியானத்தின் முக்கியத்துவம் இங்குதானிருக்கிறது—

  சங் 1:1,2 ... அவனிலுண்டாகும் புத்துணர்வும் கனிநிறைவும்

  *''அவன் செய்வதையெல்லாம் வாய்க்கச் செய்யும்''* (வச 3,4)

  *''அனுதின''* தியானம் — ஒரு பொதுவான பகுதி தனிப்பட்டு நமக்குச் செய்தியாகிவிடுகிறது.

  அது ஓர் எச்சரிப்பாய் இருக்கலாம் ...

  அது ஓர் எடுத்துக்காட்டாய் இருக்கலாம் ...

- திருவசனங்களை மனனம் செய்வதின் அவசியம் —

  சங் 40:8 ... *உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன் ...*

  *உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் ...*

  பரிசுத்த ஆவியானவர் ஏற்ற வார்த்தைகளை நமக்கு நினைவுபடுத்துவார் (யோ 14:26)

  முழு வேதத்தையும் ஒரு அல்லது இரு ஆண்டுகளில் வாசித்து முடிக்க ஒரு வேத வாசிப்பு அட்டவணையைப் பயன்படுத்துங்கள்.

## 2. தேவனது ஒப்புதலுக்காக மட்டும் ஜெபிக்கக்கூடாது.

Do not pray just for God's endorsement on your plans.

■ எசேக் 14:4,5

— நமது *இதயத்திலுள்ள* ***விக்கிரகங்களைப்*** பின்பற்ற
தேவன் நம்மை விட்டுவிடுகிறார்.
*"விக்கிரகங்கள்* = நாம் பெரிதும் ரசிப்பதும் ருசிப்பதுமானவை

பேராவலும் தீரா வாஞ்சையும் இருக்கலாம்;
ஆனால் அவை தேவனுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்—
சங் 37:5 ... *"உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவி"*
அதாவது, விருப்பு வெறுப்பைச் சாராதே.

■ நாம் தேவனிடம் ஒப்புதலுக்காகவும் கையொப்பத்திற்காகவும் செல்வதில்லை!

தேவன் தமது சித்தத்தை நமது மனதில் எழுதும்படி
நாம் அவருக்குமுன் காத்திருக்க வேண்டும்.

பிலி 2:13 ... *விருப்பங்களை உண்டாக்குகிறவர்*
நீதி 3:5,6 ... *சுயபுத்தி... சாயாமல் ... அவரை நினை*

நமது விருப்பங்களைத் தெரியப்படுத்துவதில் தவறில்லை;
ஆனால் —
மத் 26:39 ... *"ஆகிலும் எனது சித்தத்தின்படி அல்ல, உமது ..."*
:42 ...*"நான் பருகினாலொழிய ... உமது சித்தம்"*

இவ்விதம் நாம் அர்ப்பணிக்கும்போது தமது சித்தம் செய்ய
தேவன் நம்மைப் **"பலப்படுத்துவார்"** —
லூக் 22:43 ... *ஒரு தூதன் ... அவரைப் பலப்படுத்தினான் ...*

இதற்குப்பின் கிறிஸ்துவின் தைரியத்தைப் பாருங்கள் —

— யோ 18:4 ... *"யாரைத் தேடுகிறீர்கள்?"*
*"நான்தான்!"* (3 முறை) வச 5,6,8
— *"நான் பருகாதிருப்பேனோ?"* (வச 11)

யோவான் 18ஆம் அத்தியாயத்தின் மீதியை வாசியுங்கள்—

*தேவ ''ஆட்டுக்குட்டி''* இப்பொழுது *யூதாவின் ''சிங்கம்!''*

- பூரண இறைச்சித்தம் கண்டுபிடிக்க நமது இரகசிய ஆசைகள் தடையானவை —

(உ-ம்) பிலேயாம் தீர்க்கதரிசி (எண் 22)

— முதல் முறை (வச 12) ... **பூரண** இறைச்சித்தம்

— இரண்டாம் முறை (வச 15,17) ... *''அதிகப்'' பரிசுகள்*

ஜெபம் : *''இனிமேல் என்ன?''* (வச 19)

**அனுமதிச்** சித்தம் (வச 20)

கடவுளின் *''கோபம்''* (வச 22): *''உன்'' வழி மாறுபாடு* (வச 32)

புதிய ஏற்பாட்டின் விளக்கம்: அவனது இருதயம் பணத்திற்குப்பின்!

யூதா 11 — *கூலி ... வஞ்சகம் ...*

(உ-ம்) தேவன் உங்களுக்கு ஏற்கனவே நல்ல வேலை கொடுத்து ஆசீர்வதித்திருக்கும்போது, அதில் திருப்தியாய் முடிந்த வகையிலெல்லாம் அவருக்குச் சேவை செய்யுங்கள். இன்னும் ''அதிகம்'' எனும் வாய்ப்புகளுக்கு எச்சரிக்கை!

கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டுப்பாருங்கள்—

அ) எனக்குக் கட்டாயம் கூடுதல் தேவையா?

ஆ) எனது தியான நேரம், குடும்ப நேரம் ஆகியவற்றை நான் தியாகம் செய்ய நேரிடுமா?

இ) தற்போது இருக்கும் இடத்திலும், சுற்றியும் இறைச்சித்தத்தை நிறைவேற்றிவிட்டேனா?

- பல திட்டங்களும், ஆசைகளும் நமது மனதில் அலைமோதும்; ஆனால் தேவ *''ஆலோசனையே''* நிலைநிற்கும் — நீதி 19:21

— நமது திட்டங்களைத் தேவன் அறிவார் என அறியுங்கள்— அவருக்குத் தெரியாமல் நாம் காரியங்களைத் திரிக்க முடியாது.

ஏசா 29:15 ... *கர்த்தருக்கு மறைக்கிறவர்களுக்கு ஐயோ!*

— நாமாகவே தீட்டும் திட்டங்களால் ஆளப்படும்

வாழ்க்கைக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்

அடுத்த அத்தியாயத்திலேயே: ஏசா 30:1

இதுதான் *''பாவத்தோடு பாவத்தைக் கூட்டுவது''*

இதுதான் ''பாவங்களிலெல்லாம் பாவம்'' (ஏசா 53:6)

*''தன் தன் வழி''*

— கடவுளுக்கு ஆலோசனை சொல்லத் துணியாதீர்!

ரோ 11:34,35 ... *யார் ... யார் ... யார்?*

கடவுளுக்குப் பிரசங்கம்பண்ணாதீர்!

— இறைச்சித்தம் ''அறிய'' விழையும்போது,

நமது உள்நோக்கம் என்ன?—

திருச்சித்தம் ''அறிவதா'' ''செய்வதா?''

யோ 7:17 ... *அவரது சித்தம்* ***செய்ய*** *மனதுள்ளவன்* ***அறிவான்***

கொலோ 1:9,10 ... சித்தம் ⏩ நடக்கை ⏩ செயல்

will ⏩ walk ⏩ work

■ கிறிஸ்தவ வாழ்வின் துவக்கத்தில்—

இறைச்சித்தம் அறிய ஜெபித்தல்.

கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியில்—

ஆவியானவரின் உதவியோடு

இறைச்சித்தத்திற்கு இசைந்து ஜெபித்தல் (ரோ 8:26,27)

## 3. குதிரை அல்லது கழுதை போல இருக்கக்கூடாது.
Do not be like the horse or the donkey.

- வேடிக்கையாய்த் தோன்றினாலும், இதுதான் வேதப் போதனை—
  சங் 32:8,9 ... *"குதிரை ... கழுதை ... போதித்து ... காட்டி ... கண் ... ஆலோசனை"*

  அதாவது, தேவனது மென்மையான நடத்துதல் —
  *"என் கண்ணை வைத்து ....."*
  "சிமிட்டல்" போதும், "சவுக்கடி" தேவையில்லை!

  — நமது தலைவரின் கண்களையே கவனித்திருங்கள்
  சங் 123:2 ... *வேலையாட்களின் கண்கள் ... எங்கள் கண்கள் ஆண்டவரையே ...*

  ஆத்திரப்படாதிருங்கள்—
  *"அவரிடமிருந்து இரக்கம் **கிடைக்கும்வரை** ... "*

- இந்த யுகத்தில் தேவன் நம்மைக் குறிப்பான காரியங்களில் தமது ஆவியானவர் மூலமே நடத்துகிறார்—

  ரோ 8:14 ... *ஆவியினால் நடத்தப்படுபவர் ... புத்திரர்*

  பைபிளின் முதல் பக்கத்தில் தனது கூட்டின்மேல் வட்டமிடும் தாய்ப்பறவைக்கு ஆவியானவர் ஒப்பிடப்பட்டுள்ளார் — ஆதி 1:2

  அப்படியே, புதிய ஏற்பாட்டின் துவக்கப் பக்கங்களில், ஆவியானவர் ஒரு "புறா" போல இயேசுமீது இறங்கினார் — மத் 3:16
  இந்த இணைப்பைப் பாருங்கள்:
  *"புறா"* — பறவைகளிலேயே மென்மை
  (யோ 1:36) *"ஆட்டுக்குட்டி"* — மிருகங்களிலேயே மென்மை

- தேவாவியானவர் நம்மை "நடத்துகிறார்" — "கட்டியிழுப்பதில்லை"
  - ☐ ஏதேன் தோட்டம்: ஆதாமையே தெரிந்துகொள்ளவிட்டு கடவுள் மனிதன் மீதுள்ள தமது சாயலை மதித்தார் (ஆதி 2:16,17)
  - ☐ நோவாவின் காலம்: *என் ஆவி எப்பொழுதும் **போராடுவது** இல்லை* ... ஆதி 6:3 / ஏசா 57:16

☐ தாவீது இறைவனது இதயத்திற்கேற்றவனாயிருந்தான்;
*அவன் தனது தலைமுறையில்* ***இறைச்சித்தம்*** *செய்தான்*
(அப் 13:36)

அது எப்படிச் சாத்தியமானதென்றால்,
அவன் கடவுளின் ''காருண்யத்தை'' ஆழமாய் உணர்ந்திருந்தான் —
2 சாமு 22:36 ... *உமது காருண்யம் என்னைப் பெரியவனாக்கிற்று*
அடுத்த வசனத்திலேயே, *''பாதை, பாதங்கள்''* என்கிறான் (வச 37)

■ பரபரப்பான நடத்துதலையே எதிர்பார்த்து நிற்காதீர்—

☐ தீர்க்கன் எலியா
1 இரா 19:11,12 ... *''காற்றில், பூமியதிர்வில், அக்கினியில்* ***இல்லை''***
முந்திய அத்தியாயத்திலோ *''அக்கினி''* இறங்கியது!
*கர்மேல் மலை* (18:38,39)

☐ அவ்விதமே, பவுலின் மனமாற்றம் பரவசம் நிறைந்ததாயிருந்தது;
அவனுக்கு வந்த நடத்துதலோ எளிமையாயிருந்தது—
அப் 9:3-6 ... அப்போஸ்தன் அல்லாத ஒரு சாதாரண சீடனே அவனை வழிநடத்த வந்தான்! (வச 17)

■ பரவசமான வழிநடத்துதல் அசாதாரணமானது, வழக்கமானதல்ல —
கடவுள் பரம ''தந்தையாய்'' நம்மை நடத்துகிறார் (ஓசி 11:3,4)
*''கைப்பிடித்து ..... பரிவான கட்டுகள் ... அன்புக் கயிறு ...''*
— என்னே சித்திரம்!

☐ அப் 2இல் *''பலத்த காற்றும், அக்கினிமய நாவுகளும்''* இருந்தன;
கொர்நேலியுவின் வீட்டிலோ (அப் 10),
எபேசு சீடர் நடுவிலோ (அப் 19)
அப்படியொன்றுமில்லை.

☐ முழுநேரத் திருப்பணிக்கு நான் தீர்மானித்த விதம்:

அ) தேவனால் நாட்டப்பட்ட ஒரு விருப்பம்
— அவரது பணியில் வாழ்வை ஊற்றிவிட ...

ஆ) கடவுளது மனதைப் புரிந்துகொள்ளுதல்

— நெடுகவே, கிரமமாய்த் திருவசனத்தைக் தியானித்துக் கொண்டிருக்கையில்

இ) பரிசுத்த ஆவியானவரின் மெல்லிய குரல்

— பளிச்சிடும் தரிசனமோ காதுகளில் சத்தமோ இல்லை

■ ஒரே நிபந்தனை :

நொறுங்கியிருங்கள் (Be broken!)

வளைந்துகொடுங்கள் (Be flexible!)

பழைய ஏற்பாட்டில், **கற்பலகைகளில்** தேவன் எழுதினார்;
புதிய ஏற்பாட்டில், **இதயப்பலகையில்** எழுதுகிறார் (2 கொரி 3:3)

இறுக்கமாய், பிடிவாதமாய் இருக்கக்கூடாது;
இணக்கமாய், பணிவுடன் இருக்கவேண்டும்!

## 4. செல்வாக்கையோ செயலாற்றலையோ சார்ந்திருக்கக்கூடாது.
Do not depend on your strength/substance.

- ஒருவர் இப்படிச் சொன்னார் :

  பணமிருந்தால், செலுத்திச் சாதிப்பீர்கள் .....
  பணமில்லையேல், ஜெபித்துப் பார்ப்பீர்கள் ...

  — ''நம்மிடம்'' இருப்பதை வைத்தே வாழ்வைத் திட்டமிட்டால்
  விசுவாசத்திற்கு இடமேயில்லையே!

  (உ-ம்) இப்பாடத்தைக் கற்றுக்கொள்ளவே
  ஆண்டவர் தமது சீடர்களை (மத் 10:9,10)
  *''பணப்பை''* இல்லாது (பணபலம்)
  *''மிதியடி ... கைத்தடி''* இல்லாது (தற்பாதுகாப்பு) அனுப்பினார்.
  *மிதியடி* — முட்கள் ; *கைத்தடி* — திருடர்கள்

  இப்பாடத்தை அவர்கள் கற்றுவிட்டபின்னரோ,
  *''பணப்பை''* மட்டுமல்ல,
  *''பட்டயத்தையும்''* எடுத்துக்கொள்ளச் சொன்னார் (லூக் 22:35,36)

- தேவன் நம்மை **நிரப்புமுன் வெறுமையாக்குகிறார்**

  (உ-ம்) மோசே —
  அவனது வாழ்வு: முதல் 40 ஆண்டு — கில்லாடி (அப் 7:22,23)
  அடுத்த 40 ஆண்டு — பூஜ்யம் (வச 29,30)
  கடைசி 40 ஆண்டு — தேவனே எல்லாம்! (உபா 34:7)

  அவன் தனது சொந்த பலத்தால்,
  ஓர் எகிப்தியனைக் கொன்று புதைத்தான்;
  கடவுள் அவனை வெறுமையாக்கித்
  தமது பலத்தால் நிரப்பியபோதோ,
  அவனால் ஒரு சேனையையே கடலில் அமிழ்த்த முடிந்தது!

மோசேக்கு 40 வயதானபோது **''அவன்''** *சென்றான்* (அப் 7:23);
80 வயதானபோது **''கடவுள்''** *அவனை அனுப்பினார்* (வச 35)

இப்பாடத்தை நாம் ஒரே நாளில் கற்றுக்கொள்வதில்லை —
இவ்வரிய சத்தியத்தைக் கற்க மோசேக்கு 40 ஆண்டுகள் ஆயிற்று.

■ இறைவன்மை நம்மை நடத்த முடியாதபடி நமது சொந்த பலம் குறுக்கிடுகிறது —

ரோ 8:12-14 ... *மாம்சீகம் ... ஆவி ... நடத்தப்படுவது ...*

(உ-ம்) தனது சொந்த பலத்தால் கடவுளோடு யாக்கோபு
போராடினான்; அவர் அவனை முடமாக்கியபோதோ
அவரைப் பிடித்துக்கொண்டான் (ஆதி 32:22-30)

கடவுள்மீது அமரிக்கையாய்ச் சார்ந்திருப்பதே உண்மையான பலம் —

ஏசா 30:15-18 ... *அமரிக்கை ... நம்பிக்கை ... குதிரைகள் ...*

■ நமது செல்வாக்கின் மீதும் நாம் சார்ந்திருக்கக்கூடாது.
எனவேதான், இறைச்சித்தம் பற்றிப் பேசுகையில் அப்போஸ்தலன்
யாக்கோபு ''வியாபாரிகளைக்'' குறிப்பிடுகிறான் — யாக் 4:13-5:1

*''ஆண்டவருக்குச் சித்தமானால்...''*
*''நாமும் உயிரோடிருந்தால்... ''*

படிப்பினை : நமது செல்வாக்கையும் செயலாற்றலையும் நாம்
சார்ந்திருந்தால் நமக்கு இறைச்சித்தம் புரியாது.

உலகப் பொருட்கள் மீதுள்ள பற்று
இறைச்சித்தம் செய்வதைக் கடினமாக்குகிறது.

(உ-ம்) ஆபிரகாம் — கோபுரங்கள் ⏩ கூடாரங்கள் (எபி 11:9,10)
தேவ நடத்துதலின்படிச் செல்வதற்குக்
கட்டிடங்கள் தடைக்கற்களாய் மாறலாம்.

வின்ஸ்டன் சர்ச்சில்: நாம் கட்டிடங்களைக் கட்டுகிறோம்;
முடிவில் கட்டிடங்கள் நம்மைக் கட்டுப்படுத்துகின்றன.

இளம் மாணவ மாணவியர் சிந்திக்க —

எதைப் படிக்கவேண்டுமென்பது இறைச்சித்தத்தின்படியா,
இடம் வாங்க நிறையப் பணம் இருப்பதாலேயா?

- செலவுகளைச் சந்தித்தபின் காணிக்கையில் மீந்திருக்கும் பெருந்தொகைகளை வைத்து என்ன செய்வதென்று தெரியாத அநேக ஊழியர் திருச்சித்தத்தைத் தவறவிட்டிருக்கின்றனர். தேவ சித்தம் அறிய அவர்முன் காத்திருப்பதற்குப் பதிலாக அவர்களாகவே ஊழியத் திட்டங்களைக் கண்டுபிடிக்கின்றனர்.

— இறைமக்களைக் குழப்பி வழிவிலகச்
செய்வதே அதின் தவிர்க்கமுடியா விளைவு.

## 5. எல்லாக் கேள்விகளுக்கும் பதிலுக்காய்க் காத்திருக்கக்கூடாது.

Do not wait for all questions to be answered.

■ பொதுவாகச் சொல்லப்படுவது —

எதிலும் துணிந்து இறங்கிவிடாதே.
எல்லா விபரங்களும் தெரியும்வரை நகராதே.

இத்தத்துவம் பைபிள் போதிக்கும் ''விசுவாசத்திற்கு'' முரணானது — நமக்கு இருக்கும் வெளிச்சத்தில் முன்செல்லவேண்டும் என்பதே இறைச்சித்தம் —

நீதி 4:18 ... *வைகறையிலிருந்து நடுப்பகல் ...*

(உ-ம்) இங்கிலாந்திலுள்ள ஒரு 18ஆம் நூற்றாண்டு சபைத் தலைவர், ஜான் நியூமேன்

— மத்திய தரைக்கடலில் பயணத்தின்போது
அவரது கப்பல் கடும்புயலிலும் காரிருளிலும் சிக்கிற்று.

அப்பொழுதுதான் உலகப்புகழ்பெற்ற இப்பாடலை இயற்றினார்—

*காரிருளில் என் நேச தீபமே, நடத்துமேன்;*
*வேறொளியில்லை, வீடும் தூரமே, நடத்துமேன்;*
*நீர் தாங்கின் தூரக் காட்சி ஆசியேன்...*
*ஓர் அடி மட்டும் என்முன் காட்டுமேன்!*

*Lead, kindly light, amid the encircling gloom ...*
*The distant scene; — one step enough for me!*

துர்ப்பாக்கியமாக இப்பாடல் இப்பொழுதெல்லாம்
அடக்க ஆராதனைகளில்தான் பாடப்படுகிறது—

இப்பாடல் இறந்தோருக்கல்ல,
இருப்போருக்கு!

ஜெபியுங்கள் : ''ஓர் அடி காட்டினால் போதும், ஆண்டவா!''

— கச்சிதமானதோர் எடுத்துக்காட்டு:

ஆபிரகாம்
ஆதி 12:1 ... *நான் காட்டப்**போகும்** நாட்டுக்குப் போ!*
எபி 11:8 ... *போகுமிடம் **தெரியாது** போனான்!*

விபரங்களுக்காய் அவன் காத்திருக்கவில்லை.
இல்லையேல் அதில் பரவசமேது? சாதனையேது?

■ இன்று நடமாடும் தவறான உபதேசம் —

தீர்க்கதரிசனத்தில் தோன்றியுள்ள புத்தார்வத்தினால்,
மக்களது வாழ்வுக்காய் ஜெபித்து முழு வரைபடத்தையும்
வாங்கித் தருவதாய்ப் பிரசங்கிமார் வாக்களிக்கின்றனர் —

கடவுள் **நமக்கு** முழு வரைபடமும் (blueprint) தருவதில்லை;
ஒரு ''திசைமானியை'' (compass) மட்டுமே தருகிறார்.

(உ-ம்) தனக்காய்க் காத்திருந்த உபத்திரவங்கள் பற்றிய
பொதுவான அறிவு மட்டுமே பவுலுக்கிருந்தது—
அப் 20:22,23 .... *எருசலேம் .... போகிறேன் .... அறியேன்*

■ கடவுள் காட்டியதின் அடிப்படையில் நாம் முன்செல்லும்போது,
ஒருவேளை நாம் தவறு செய்தாலும்—

| | | |
|---|---|---|
| ஓர் இக்கட்டு: | ஏசா 30:20அ | *''துன்பம் ... உபத்திரவம்''* |
| கொஞ்சம் வெளிச்சம் | :20ஆ | *''கண்கள் ... போதகர்கள்''* |
| திருத்தும் சத்தம் | :21 | *''இடது... வலது ... காதுகள்''* |

■ பொதுவான இறைச்சித்தமாய்ப் போதிக்கப்பட்டிருப்பதை நாம்
**செய்துகொண்டிருந்தால்தான்**, குறிப்பான சித்தம் நமக்குப் புரியும் —
லூக் 12 : 43 ... ***செய்கிறவனாய்க்** காணப்படுகிறவன் ...*
அதுவே எஜமானது சித்தம் (வச 47)

காத்திருக்கிறேனென்று ஒன்றும் செய்யாது சும்மாயிராதீர்!

— நேரத்தை வீணடித்தால், இறைச்சித்தம் புரியாது
எபே 5:15-17 ... *ஞானம் ... காலம் ... இறைச்சித்தம்*

— வாய்த்ததைச் செய்வதில் விறுவிறுப்பாயிருங்கள் (பிர 9:10)

(உ-ம்) எசேக்கியா அரசன் 2 நாளா 31:20,21

*''நன்மை ... செம்மை ... உண்மை ... சித்திபெற்றான்''*

புதிய ஏற்பாட்டு உபதேசம் :

ரோ 12:2 ... *''நன்மையும் பிரியமுமான பூரண திருச்சித்தம்''*

■ சில வேளைகளில் கடவுளது அடிச்சுவடுகள் தெரியாது போகலாம்; ஆனாலும் அவர் நடத்துகிறார்—

சங் 77:19,20 ... *உமது வழி ... கடல் ... பாதை ... தண்ணீர் ...*

*''மோசே, ஆரோன்''* போன்ற தலைவர்கள் மூலம் நடத்துவார்

■ நித்தியமான சில சத்தியங்கள்

அ) நமது காலங்கள் கடவுளது கரங்களில் —

சங் 31:14,15 ... *''உம்மை நம்பியிருக்கிறேன்''*

ஆ) துவக்கமுதல் முடிவை அறிந்தவர் கடவுளே —

ஏசா 46:10 ... *''அவரது* ***ஆலோசனையே*** *நிலைநிற்கும்''*

இ) கடவுள் தமது சித்தத்தைப் படிப்படியாகவே வெளிப்படுத்துகிறார்; ஏனெனில், மொத்தமாக நம்மால் எடுக்க முடியாது; புரிந்துகொள்ளமுடியாத அளவு அவை உயர்ந்தவை —

ஏசா 55:8,9 ... *உயர்ந்த வழிகள் ... உயர்ந்த எண்ணங்கள்*

எல்லாக் கேள்விகளும் பதிலளிக்கப்படவும்,
எல்லா விபரங்களும் தெரியவும் காத்திருக்காதீர்!

அதுவா இதுவா என்று யோசித்துக்கொண்டேயிருந்தால்
''இரண்டுங்கெட்ட நிலைதான்.''

யாக் 1:8 ... *தன்* ***வழிகளில் எல்லாம்*** *நிலையற்றவன்.*

## 6. அடைக்கப்பட்ட கதவுகளை உதாசீனப்படுத்தக்கூடாது.

Do not despise closed doors.

■ திறந்த வாசல்களெல்லாம் கடவுளின் ஏற்பாடு;
மூடிய வாசல்களெல்லாம் பிசாசின் இடர்பாடு
என்று நினைப்பது தவறு

சத்தியம் யாதெனில்—
கதவுகளைத் திறப்பதும், அடைப்பதும் தேவனே.
பழைய ஏற்பாட்டில்: ஏசா 22:22
புதிய ஏற்பாட்டில் : வெளி 3:7

கேட்கவேண்டியது : **சாவி யாரிடம்** இருக்கிறது?
அது கடவுளிடமே!

சாவியை வைத்திருப்பவர் கடவுளானால்,
எது எப்படியிருந்தாலும் ஒன்றுதானே?

■ அடைக்கப்பட்ட வாசல்கள் மூலமாகவும் கடவுள் நடத்துகிறார்—
(உ-ம்) உயிர்த்தெழுந்தபின் இயேசு (யோ 20:19)

இயேசுவே *''வாசல்''* தானே?

நாம் பெரும்பாலும் சுயசித்தத்தாலேயே ஆளப்படுவதால்,
திறந்த வாசல்களைவிட மூடியவை மூலமே கடவுள் நடத்துகிறார்!

— கடவுள் *''மலைகளின்''* தேவன், *''பள்ளத்தாக்குகளின்''*
தேவனல்ல என்பது அஞ்ஞான மார்க்கத்தினரின் நம்பிக்கை ...
1 இரா 20:23.28

— கடவுள் *''சேரக்கூடாத ஒளியில்''* மட்டுமல்ல,
*''காரிருளிலும்''* வாசம்பண்ணுகிறார் ...
ஒளி : 1 தீமோ 6:16
இருள் : 1 இரா 8:12 ... *''கர்த்தரே சொன்னது''*

— ''பகல், இரவு'' ஆகிய இரண்டுக்கும் தேவனவர்.

சங் 74:16 ... *பகல் உம்முடையது ... இரவும் உம்முடையது*

சொல்லப்போனால், படைப்பில் **முதல்** வருவது இரவே

(ஆதி 1:5,8,13)

— பச்சைக்கொடி மட்டும் வைத்துப் புகைவண்டியை நடத்தமுடியுமா? சிவப்புக்கொடியும் தேவைதானே?

இவ்விதம் கடவுளைப் பற்றிய **''சமநிலைப்''** பார்வை நமக்குத் தெளிவாக, நடைமுறையில் இருக்கவேண்டும்.

■ திறந்த வாசலே எப்பொழுதும் தேவ சித்தம் எனக் கூறமுடியாது—

□ யோனா : நினிவேக்கா, தர்ஷீசுக்கா?

தர்ஷீசுக்குத்தான் கப்பல் ஆயத்தமாயிருந்தது! (யோனா 1:2,3)

□ ஒரே மாதிரியான சூழ்நிலைகளிலும் கூட கடவுள் தமது நடத்துதல் முறைகளை மாற்றுகிறார்:

ஆபிரகாம் — பஞ்சம் — எகிப்துக்குச் சென்றான் (ஆதி 12:10)
ஈசாக்கு — எகிப்துக்குப் போகாது கடவுள் தடுத்தார் (26:1,2,6,12)

■ ''திறந்த'' வாசல்கள், ''மூடிய'' வாசல்கள் என்று கடவுள் மாறி மாறி நடத்துவதற்கு ஒரு சிறந்த சான்று —

அப் 16:6-8... ஆசியா (மூடியது) ⏩ பித்தினியா (மூடியது) ⏩ துரோவா
2 கொரி 2:12,13,14...துரோவாவில் **திறந்த** வாசல் ⏩ மக்கெதோனியா

விளைவு : லீதியாளின் மனமாற்றம் (அப் 16:14)
சிறையதிகாரியின் மனமாற்றம் (அப் 16:33,34)

■ அடைபட்ட வாசல்களுக்காய்க் கடவுளைத் துதிப்போம்!

சில வாசல்களைக் கடவுள் அடைக்காவிடில்,
திறந்த வாசல் எதிலும் நுழைந்துவிடுவோம்—
திறந்த வாசல்களில் சில கண்ணிகளாயிருக்கலாம்!

■ திறந்த வாசல்கள் என்றதும் பிரச்னையே அவற்றில் இருக்காது என்றெண்ணக்கூடாது—

1 கொரி 16:9...*பெரிய...அனுகூல கதவு...விரோதிகள் அநேகர்*

- பல சமயங்களில், அடைக்கப்பட்ட வாசல் போன்ற சூழல்களில்தான் கடவுள் தமது வல்லமையைக் கூடுதல் வெளிப்படுத்துகிறார் —

  ஏசா 45:2-4 ... *வெண்கலம் ... இரும்பு ... இருள் ...*

- இதுவா அதுவா என்று வெகுவாய்க் குழப்பும் சூழல்களில், தமது சித்தமில்லாததைக் கடவுள் அடைக்கும்படி வேண்டுவதில் தவறேதுமில்லை.

  — நான் பொதுவாக இப்படிச் செய்கிறேன்.

- *''விசால வழி''* ... *''இடுக்க வாசல்''* ... இவை பற்றி இயேசுவானவர் போதித்ததையும் நினைவில் வையுங்கள்—

  மத் 7:13,14

## 7. அளவுக்குமீறி கலந்தாலோசிக்கக்கூடாது.
Do not over-consult people.

- முதியவர்களிடமும், முதிர்ந்தவர்களிடமும் ஆலோசனை பெறுவதைப் பைபிள் ஊக்குவிக்கிறது —

  நீதி 11:14 ... *''அநேக'' ஆலோசனைக்காரர்*
  அதாவது, ஆலோசனைகளை முற்றிலும் தள்ளுவதோ கவனியாது விடுவதோ கூடாது —
  *''ஆலோசனையில்லாத இடம் ...''*

பெரிய காரியங்களில் கலந்தாலோசிப்பது பாதுகாப்பானது;
ஆனாலும் யாரைப் பார்த்தாலும் ஆலோசனை கேட்பது குழப்பிவிடும்.
ஏன்?
இவ்வுலகில் பக்தியுள்ளோரைவிட பக்தியற்றோரே அதிகம்.
*விசால வழி* VS. *இடுக்க வாசல்* (மத் 7:13.14)

எனவேதான் நமது நண்பரைத் தெரிந்தெடுப்பதில்
அதிகக் கவனம் தேவை (நீதி 12:26)
*சான்றோர் ... நண்பர் ... பொல்லார் ... தவறிழைப்பு*

முதலாம் சங்கீதத்தின் முதலாம் வசனமே நம்மை எச்சரிக்கிறது—

*''துன்மார்க்கரின் **ஆலோசனை**''* (சங் 1:1)
(உ-ம்) பார்வோன் ... எகிப்து (ஏசா 30:1,2)
*என் ஆலோசனை... பார்வோனின் பலம்... எகிப்தின் நிழல்...*

— விசுவாசிகளின் நடுவிலும்,
''ஆன்மீகக்'' கிறிஸ்தவரைவிட ''மாம்சீகக்'' கிறிஸ்தவரே அதிகம்!
பிலி 3:18,19 ... *அநேகர் வேறுவிதமாய் ... இகத்துக்கடுத்தவை*

— இறைப்பணியாளர் என்று சொல்லிக்கொள்ளும் எல்லாரையும் நம்பிவிடமுடியாது; ஏனெனில் ''கள்ளத்'' தீர்க்கர்தான் ''அநேகர்''—

☐ இயேசுவே அப்படிச் சொன்னார் :

மத் 7:15,22 ... *கள்ளத் தீர்க்கதரிசிகள் ... அநேகர்*

தமது ஊழியத் துவக்கத்தில் (மலைப் பிரசங்கம்)

மத் 24:11 ... *அநேகக் கள்ளத் தீர்க்கதரிசிகள்*

தமது ஊழிய முடிவில் (ஒலிவமலை முன்னறிவிப்பு)

☐ அப்போஸ்தலன் யோவானும் அப்படிச் சொன்னான் :

1 யோ 4:1 ... *அநேகக் கள்ளத் தீர்க்கதரிசிகள்*

■ இச்சத்தியத்தை விளக்க இதோ சில எடுத்துக்காட்டுகள்—

☐ தமது உறவினரிடம் (சகோதரர்) இயேசு ... யோ 7:2-6

☐ தமது மூத்த சீடனிடம் ... மத் 16:21-23

☐ மனமாற்றத்திற்குப்பின் பவுல் எருசலேம் செல்லவில்லை ...

— கிருபையின் சுவிசேஷம் கலப்படமாகிவிடாதபடி! (கலா 1:15-19)

☐ பவுல் — அகபு — பிலிப்புவின் 4 குமாரத்திகள்

அப் 21:8-14 ... *''கர்த்தரின் சித்தம்''*

இதில் யார் சரி? பவுல்தான் (அப் 23:11)

தகவலையும் நடத்துதலையும் வேறுபிரிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

■ எதிர்மறையான சில எடுத்துக்காட்டுகள் —

☐ கிபியோனியரும் யோசுவாவும்

யோசு 9:3,4அ,8,9,14 ... கவர்ச்சிகர வாய்ப்புகளினால்

கிபியோனியரோடு ஒப்பந்தம்!

☐ ஒரு தேவ மனிதனும் ஒரு பழம் தீர்க்கனும்

1 இரா 13:14ஆ-19,24,26 ... *சிங்கத்திற்கு ஒப்புக்கொடுத்தார்*

■ ''வேறே'' சத்தங்களுக்கு எச்சரிக்கை!

யோ 10:4,5 ... *ஆடுகள் ... அந்நியரின் சத்தம் ...*

நமக்கு நடத்துதல் பிரதானமாய்க் கர்த்தரிடமிருந்து

திருவசனம், தூயாவியானவர் மூலமே வரவேண்டும் —

கலந்துரையாடல் அதற்கு அடுத்ததே—

இல்லையேல் நாம் வழிதவறிவிடுவோம்—

நீதி 19:27 ... *அறிவு வார்த்தைகள் ... விலகச் செய்யும் போதகங்கள்*

■ உங்களை வசப்படுத்தும்படி உங்கள் மீது பலவித அழுத்தங்களைக் கொண்டுவருவோர்க்கு எச்சரிக்கை!

அப்போஸ்தலர் ***கனிவாகவே*** நடந்துகொண்டனர் ...

1 கொரி 16:12,14 ... *அப்பொல்லோ ... அன்புடன் ...*

1 தெச 2:7 ... *பால் கொடுக்கும் தாய் ...*

## 8. பொது அறிவைத் தட்டிக்கழிக்கக்கூடாது.
Do not bypass common sense.

- பொது அறிவு பொதுவாக அரிதாகிவிட்டது!
  பொது அறிவு சொல்வது சரியானால், வேறே அறிவைத் தேடாதீர்!

- தவறானதொரு கருத்து :
  நமது வாழ்வைக் கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கும்போது
  நாமாகவே சிந்திப்பதையும் நிறுத்திவிடவேண்டும்!

ஆனால் விவிலியம் போதிப்பது: ரோ 12:2
*''பரிபூரண சித்தம்''* — *மனதைப்* புதைத்தல் அல்ல, *புதிதாக்குதல்*

நம்மைக் கிறிஸ்துவிடம் அர்ப்பணிக்கும்போது,
நமது பொது அறிவு ***புனிதமடைகிறது!***

- பொது அறிவு என்பது கடவுள் ஒவ்வொருவருக்கும் தந்தது —
  ரோ 2:14,15 ... *சுபாவம் .... இதயம் .... மனச்சாட்சி ... சிந்தனை*

— திருச்சட்டங்கள் இல்லாமலேயே நிதானிக்கும் திறன்

பொது அறிவை மக்கள் பயன்படுத்தாதபோது தேவன் புலம்புகிறார்—
எரே 49:7 ... *ஆலோசனை அழிந்து ... ஞானம் கெட்டு ....*

நாம் பொது அறிவைப் பயன்படுத்தத் தவறும்போது,
அர்த்தமற்ற சடங்குகள், வீண் பாரம்பரியங்கள், துர்ப்பழக்கங்களுக்கு
அடிமைகளாகிவிடுவோம்—

ஏசா 5: 13அ ... *அறிவில்லாமையால் ... சிறை ...*
ஓசி 4:6 ... *அறிவில்லாமையால் ... சங்காரம் ...*

- பொது அறிவைப் பயன்படுத்த இயேசு அடிக்கடி விடுத்த அழைப்பு—

(உ-ம்) மத் 18:12...*உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?...100 ஆடுகள்*

21:28 ... *உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?*

லூக் 14:28-31 ... *ஆகும் செலவைக் கணியுங்கள்*

*''கணக்கீடு''*

(கட்டிடம் கட்டுதல் அல்லது போர் தொடுத்தல்)

விசுவாசம் VS. துணிகரம்!

■ அப்போஸ்தலரும் பொது அறிவை வலியுறுத்தினர்—

1 கொரி 11:14 ... *சுபாவமே போதிக்கவில்லையா ...*

*ஆண்களுக்கு நீள முடி ...*

அவர்கள் பொது அறிவினால், தர்க்கரீதியில், ஊழியத்திற்கு நடத்துதல் பெற்றதற்கு ஓர் எடுத்துக்காட்டு —

பிலி 2:19-28

*''ஏனென்றால் ... ஆகையால் ... ஆனாலும் ...''*

■ நமது பொது அறிவைக் கூர்மையாக்குவது எப்படி?—

அ) கடவுளிடம் வேண்டுவதின் மூலம் (யாக் 1:5).

அவர் பொது அறிவைத் தருகிறார்—

(உ-ம்) ஏசா 28:27-29 .... *உளுந்து .... சீரகம் ....* வண்டி *உருளை*

ஆ) திருமறையிலுள்ள ஞானப்புத்தகங்களை வாசிப்பதின் மூலம் —

யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, ...

முக்கியமாக ''நீதிமொழிகள்'' —

31 அத்தியாயங்கள் ... மாதாமாதம் நாளுக்கொன்று.

வெளியேற்றவும், நிரப்பவும் (இரட்டை ஆசீர்)

நீதி 1:4,5 ... அ) *பேதைகளுக்கு* ... ஒன்றும் அறியாதோர்

ஆ) *வாலிபருக்கு* .... கொஞ்சம் அறிந்தோர்

இ) *புத்திமான்களுக்கு* .... கூடுதல் அறிந்தோர்

ஈ) *விவேகிகளுக்கு* .... ஏராளம் அறிந்தோர்

அதாவது, எல்லா வகுப்பினருக்கும்!

திருவாக்கு: நீதி 2:11 ... *''**நல்யோசனை** உன்னைக் காப்பாற்றும்''*

■ *"நல்யோசனை"* (discretion) என்பதற்கு இன்னொரு சொல்—
"நிதானிப்பு" (discernment)

இதைப் பெறுவது எப்படி —

அ) இது வளர்க்கவேண்டிய ஒரு கலை (எபி 5:14)
— *பயிற்சியின் மூலம்*

ஆ) இது விரும்பவேண்டிய ஒரு வரம் (1 கொரி 12:10)

எவராவது தீர்க்கதரிசனம் சொன்னாலும்,
அது நிதானிக்கப்படவேண்டும் (1 கொரி 14:29)
— அதை ஒன்றுக்கு மேற்பட்டோர் சொன்னாலும் ...

## 9. பயணம் சுமூகமாகவே இருக்குமென எதிர்பார்க்கக்கூடாது.

Do not expect a smooth passage.

■ நமது வாழ்வில் தேவனது நடத்துதலைப் பின்பற்றும்போது,
நிச்சயமானது எதுவென்றால் —

நமது விமானம் தரையிறங்குதல் பாதுகாப்பாயிருக்கும்;
பயணமோ சுமூகமாயிராமல் மேலும் கீழுமாயிருக்கலாம்.

☐ இயேசு: *"அக்கரைக்குப் போவோம் ... புயல்"* (மாற் 4:35-40)
கிறிஸ்து படகிலிருந்தால் புயலைப் பார்த்துப் புன்னகைதான்!

☐ தண்ணீர்மீது நடந்து தம்மிடம் வரும்படி
பேதுருவை அழைத்தது இயேசுதான்;
அவனோ *மூழ்கத் துவங்கினான்* (மத் 14:26-30)

■ தேவனது வழிகள் பெரும்பாலும் புயலில்தான் —
நாகூம் 1:3 ஆ ... *புயலிலும் ...பெருங்காற்றிலும்* ....

இக்கட்டுகளினூடே செல்கையில்தான் எனது வாழ்விற்கும்
ஊழியத்திற்கும் முக்கிய நடத்துதல்கள் பல பெற்றிருக்கிறேன்!

■ தனது மிஷனரிப் பயணங்கள் குறித்துப் பவுலின் சாட்சி—
2 கொரி 2:14 ... *எல்லா இடங்களிலும் வெற்றி* ...

ஆனால், பயணம் எப்படியிருந்தது தெரியுமா?
2 கொரி 11:24-27 ... *ஆபத்துக்கள் ... மோசங்கள்* ...

இவற்றையெல்லாம் குறைகூறலாய் அல்ல,
கடவுளுக்குத் *"துதி"* செலுத்தும்படிச் சாட்சியாய் எழுதுகிறான் (வச 31)

உ-ம்) ரோம் நகருக்குப் பவுலின் கடற்பயணம் —
*"மிகுந்த ஜெபத்துடன் தேவ சித்தப்படி"*
மேற்கொள்ளப்பட்டதொரு பயணம் (ரோ 1:12)

பயணமோ எப்படியிருந்தது? அப் 27:22-26

— தூதன் தோன்றி அங்கீகரித்து உறுதிப்படுத்தினாலும் (வச 23)

- இறையரசுக்கான பாதையில் சிவப்புக் கம்பள விரிப்பு அல்ல, *''உபத்திரவங்கள்தான்'' அநேகமாயிருக்கும்—*

 அப் 14:21,22

- பிரபலமான 23ஆம் சங்கீதம் —

 வச 3ஆ ... *''அவர் என்னை நடத்துகிறார்...''*

 வச 4ஆ ... *''மரண இருளின் பள்ளத்தாக்கு ...''*

இதுதான் *''தேவ சித்தப்படி பாடனுபவித்தல்''* என்பதின் அர்த்தம் —

 1 பேரு 4:19 ... *''நன்மை செய்கிறவர்களாய் ...''*

''சாதகமான காலநிலையையே'' எதிர்நோக்கியிராதீர் —

 பிர 11:4 ... *''விதைக்க''* ... துவங்குதல்

 *''அறுக்க''* ... நிறைவு செய்தல்

- அப்படியானால் கீழ்க்கண்ட கூற்று சரியா? —

 தேவனது வழியில், தேவனது வேளையில்,

 தேவனது வேலை செய்யும் தேவனது மனிதருக்குத்

 தேவனது ஒத்தாசை இல்லாது போகாது!

 இது தேவனது **முடிவான** உதவி குறித்துப்

 **பொதுவாகக்** கண்டறிந்தது, அவ்வளவுதான்!

அவர் இக்கட்டுகளை அனுமதிக்கிறார் —

 (உ-ம் ) கிதியோனும் மீதியானியரும்

 நியா 6:3,4 ... *விளைச்சலைக் கெடுத்து ...*

 :12 ... *''கர்த்தர் உன்னோடு இருக்கிறார்!''*

 :13 ... *கர்த்தர் எங்களோடு இருந்தால் ...?*

 :14 ... *புறப்பட்டுப் போ!*

**10. கடந்தகால வழிநடத்துதலைச் சார்ந்திருக்கக்கூடாது.**

Do not depend on past guidance.

- தேவ நடத்துதல் எப்பொழுதுமே பூரணமானது;
  ஆனால் காலத்திற்குக் காலம் அது வேறுபடும்.

  (உ-ம் ) தாவீதும் பெலிஸ்தியருக்கு எதிரான அவனது யுத்தமும்—
  2 சாமு 5:19 ... *"நேரே அவர்களுக்கு விரோதமாய்ப் போ!"*
  :22,23 ... *"அவர்களுக்குப் பின்னால் சுற்றிப் போ!"*

  அவ்வப்போது கர்த்தரிடம் விசாரித்துக்கொள்ளும் பழக்கம் தாவீதுக்கு இருந்தது—

  எனவேதான்: *கடவுளது இதயத்திற்கேற்றவன்* (அப் 13:22)
  தனது காலத்தில் தேவ சித்தம் செய்தவன் (வச 36)

- பழைய ஏற்பாட்டில் இன்னொரு நேர்த்தியான எடுத்துக்காட்டு —
  ஆபிரகாமின் அடிமைப்பெண் ஆகார்

  முதல் முறை (ஆதி 16:6-9),
  தேவன் அவளைச் *சாராளிடம் திரும்பிப்போகச்* சொல்கிறார்.

  அடுத்த முறை (ஆதி 21:9-13),
  *அவளை அனுப்பிவிடும்படித்* தேவனே ஆபிரகாமிடம் சொல்கிறார்.

- தனி நபர்கள் மட்டுமல்ல, இறைமக்கள் கூட்டாகவும் காலத்திற்குக் காலம் வித்தியாசமாய் நடத்தப்பட்டனர்—

  *வனாந்திரத்தில் மேகமும் நெருப்பும்* (யாத் 40:38);
  வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைந்தபோதோ,
  அவர்களை நடத்தியது *"திருவார்த்தையே"* (யோசு 1:8)

  கிறிஸ்தவ வாழ்விலும் அப்படித்தான்—
  துவக்கத்தில்: ஆவியானவரின் ஏவுதல்கள், உந்துதல்கள்
  (ஏனெனில், இக்கட்டத்தில் நமது வேத அறிவு குறைவு)

முதிர்ச்சியடையும்போதோ : எழுதப்பட்ட **வார்த்தையின்** மூலம்
நிதானிப்பும் நடத்துதலும் (எபி 5:13,14)

☐ ஆரம்ப ஆண்டுகள்:
சிலாக்கியங்களில் மகிழ்தல் —
*"கடவுளது மன்னிப்பு"* (1 யோ 2:12)
*"கடவுளது தந்தைத்துவம்"* ( :13இ)

பிந்திய ஆண்டுகள் (வளர்ந்தபின்):
பொறுப்புகளை உணர்தல் —
*"அறிவு"* (வச 13அ, 14அ)
அதாவது, இந்த அறிவுக்கேற்ற நடக்கை

☐ ஆரம்ப ஆண்டுகள் : நமது விருப்பங்களின்படி செய்ய
ஆண்டவர் விடுகிறார்
பிந்திய ஆண்டுகள் : சில கட்டுப்பாடுகளை விதிக்கிறார்
(உ-ம்) பேதுரு (யோ 21:18)

☐ ஆரம்ப ஆண்டுகள்: அதையும் இதையும் செய்ய தேவன் நம்மை
**அழைக்கிறார்.**
பிந்திய ஆண்டுகள் : நாமே **தெரிந்துகொள்ள** விடுகிறார்.

■ இச்சத்தியத்தின் இன்னோர் அம்சம் —
நாம் பெற்ற வெளிச்சத்தின் அளவுக்குத்தான் இறைநடத்துதல் :
*அறியாமையின் காலங்கள்:* அப் 17:30
(இது நம்மெல்லாருக்கும் உண்டுதானே?)
படிப்படியான வெளிப்பாடு : எபி 1:1.2

■ கடவுளது "நடத்துதலோடு"
ஏதாவதொரு "போதனையும்" இருக்கும் — (சங் 32:8)

ஒரு பாடத்திலிருந்து அடுத்ததற்கு நம்மை
எடுத்துச் செல்ல, கடவுள் தமது நடத்துதலை மாற்றுகிறார்.

ஒவ்வொரு நாளுக்கும் ஒளியும் இருளும் இருப்பதுபோல்,
நமது வாழ்விற்கும் பல காலக்கட்டங்கள் உண்டு —
பிர 3:1-8

ஒவ்வொரு காலக்கட்டத்திற்கும் ஏற்றவாறு தேவ நடத்துதல் —

(வச 11அ) ... *''அதினதின் காலத்தில் நேர்த்தியாய் ...''*
(வச 11ஆ) ... *''ஒருவரும் கண்டுபிடியாதபடி ...''*

- **திருப்பணியில்** இருப்போருக்கு ஒரு வார்த்தை:

  நாம் ஊழியம் செய்யும் மக்களுக்கு ஏற்றாற்போலும்
  தேவ நடத்துதல் மாறும் —

  (உ-ம்) இஸ்ரவேலரிடம் செல்கையில்: *''பணப்பை வேண்டாம்''*
  (மத் 10:6,9,10)

  புறவினத்தாரிடம் செல்கையில்:
  *''பணம்சேர்க்குதல் வேண்டாம்''* (3 யோ 7)

- நமது தேவன் பல விதங்களின் தேவன்!

  — ஒரே வித சூழ்நிலையென்றாலும்,
  இரு நபர்களை அவர் ஒன்றுபோல் நடத்துவதில்லை!
  எனவேதான், வாழ்க்கை சரிதைகளும் சுய சரிதைகளும்
  பொதுவான அறிவுக்கும் சவாலுக்கும்தான்.

  — தேவப் பிள்ளைகளில் ஒவ்வொருவரும் ஒருவிதம்;
  முடிவான நோக்கமோ எல்லாருக்கும் ஒன்றே!

  — கடந்த கால அனுபவங்களிலிருந்து கற்கலாம்;
  இன்றைக்கோ அவை பூரண நடத்துதலாய் இருக்கமுடியாது!